2014 ஆகஸ்ட் 7]

373—

மாணவியர் விடுதி

***30676—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கேட்காமலேயே கொடுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட ரூபாய் 145.27 இலட்சம் ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கட்டடம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 11-25

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லாமைதனை இல்லாமை ஆக்குகிறேன்; இல்லாமைதனை இல்லாததாக்குகிறேன் என்ற உறுதிப்பாட்டுடன் ஆட்சிப்*

பொறுப்பேற்ற 6, 7 மாதத்திற்குள் அரக்கோணம் தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தந்து, அதற்குக் கட்டடம் கட்ட ரூ. 7½ கோடியும் தந்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியிலே பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதி கட்ட ரூபாய் ஒரு கோடியும் தந்ததோடு மட்டுமல்லாமல், ஆதி திராவிடர் பள்ளி மாணவியர்களுக்கு ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்தையும் தந்து, விடுதிக் கட்டடமும் தந்து, அவர்களின் கல்விக்காக அடுக்கடுக்கான திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு நேற்றைக்கு தீயணைப்புப் படை வீரர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட ரூபாய் 2 கோடியே 68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அரக்கோணம் தொகுதிக்கு வாரி, வாரி வழங்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி கட்டப்படுமா என்ற வினாவைத் தொடுத்து, அதற்கான விடை அவைக்கு வருவதற்கு முன்பே, ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பில் விடுதிக் கட்டடம் கட்டும் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

374—

ஆரம்ப சுகாதார நிலையம்

***39664—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சந்தையூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?